உ
சிவமயம்



# வேதவன விநாயகர்
# கவசம்



ஆக்கம்-செ.சுதாகரன்
(வயலூரான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# வேதவன விநாயகர் கவசம்

"வயலூரான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | :- | வேதவன விநாயகர் கவசம் |
| பாவகை | :- | நேரிசை ஆசிரியப்பா |
| நூலாசிரியர் | :- | செல்வராஜா சுதாகரன் (வயலூரான்) |
| தொலைபேசி | :- | 0770710729 |
| முதற்பதிப்பு | :- | 2019 டிசம்பர் |
| பதிப்பாசிரியர் | :- | அப்பாக்குட்டி செல்வராஜா (கஜமுகாசுரன் போர் உபயகாரர்) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் பிரதம சிவாச்சாரியார்
சிவஸ்ரீ.கி.சோமசுந்தரக் குருக்கள்



அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

சகல வளங்களும் நிறைந்தோங்கும் சாவகச்சேரி நகரில் 'கல்வயல்' எனும் சைவமும் தமிழும் சிறந்தோங்குவதும் ஐந்து விநாயகர் ஆலயங்கள் அமைந்த பெருமையுடையதும் ஆகிய இப்பதியில் ஆண்டாண்டு காலமாக கோவில் கொண்டெழுந்தருளி அனைவருக்கும் திருவருள் பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு வேதவனப் பிள்ளையார் ஆலயத்தில் விநாயகரை வழிபடு தெய்வமாகவும், குலதெய்வமாகவும் கொண்டு வணங்கும் அடியார்கள் வதியும் 'மாவளவார்' எனும் குடும்பத்தினர் வாழ்ந்து வந்துள்ளனர்.

அவர்களில் "மாவளவு அப்பாக்குட்டி வாத்தியார்" என்று சிறப்பாகக் கூறப்படும் சிறந்த புராணமேதை புராணங்களை ஓதியும், பயன் சொல்லியும் கல்வயலிலுள்ள பெரியார்களுக்கு புராணங்களைச் சொல்லிக் கொடுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையுடன் வாழ்ந்தவர். அவருடைய இளைய புதல்வரான திரு.செல்வராசா அவர்கள் விவசாயத்துறையில் சிறந்தவரும் வேதவனப் பிள்ளையார் வழிபாடு காரரும், விழா உபயகாரரும் ஆலய நிர்வாக ஆலோசகருமாவார். அவருடைய மூத்த புதல்வர் திரு.சுதாகரன் அவர்கள் அரசாங்க உத்தியோகத்தராவார். அத்தோடு மட்டுமல்லாமல் சிறந்த கவிஞருமாவார். அவர் பக்திபூர்வமாக வேதவன விநாயகப் பெருமானுக்கு எத்தனையோ கவிகள் புனைந்து சமர்ப்பித்துள்ளார். அவைகளெல்லாம் பக்தியும் ஆன்மீகத் தன்மையும் தெய்வ உணர்வும் சேர்ந்தவைகளாகும். சிவத்திரு தேவராஜ சுவாமிகள் முருகன் மீது "கந்தசஷ்டி கவசம்" பாடியுள்ளார். பரஞ்சோதிமாமுனிவர் விநாயகர் கவசம் எனும் திவ்ய பிரபந்தத்தை இயற்றியுள்ளார்.

அவ்வண்ணமே இக் கவசங்களைப் படித்த தம்பி சுதாகரன் அவர்கள் வேதவனப் பிள்ளையார் மீது கொண்ட தெய்வீக அன்பு காரணமாக "வேதவனவிநாயகர் கவசம்" என்னும் பக்திபூர்வமான கவசத்தை பாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையாக பெருமானுக்குச் சமர்ப்பித்துள்ளார். கவசம் பாடுவது என்பது எளிதல்ல. பக்தியும் பெருமானுடைய பூரணமான வடிவுச்சிறப்பும் ஆலயத்தின் பெருமையும் சேர்ந்தே அவரை இதை எழுதவைத்துள்ளது. எனவே இக்கவசம் மட்டுமல்லாது மேன்மேலும் பல கவிகளைப் பாடி பெருமானுக்குச் சமர்ப்பணம் செய்ய வேண்டுமென்று பணிந்து அவரை வாழ்த்தி அமைகின்றேன்.

இவ்வாலய விழாக்காலங்களில் கூட்டுப் பிரார்த்தனை பாடும் அடியார்கள் இக் கவசத்தையும் ஓத வேண்டும் இதனால் வேதவனப் பிள்ளையாரின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கும் வண்ணம் வேதவனத்தானைப் பிரார்த்திக்கின்றேன்.

**வாழ்க! வளர்க!! வணக்கம்!!!**

**42/11 சுவிசுத்தாராம றோட்,**
**வெள்ளவத்தை,**
**கொழும்பு – 06.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

எங்கள் குலதெய்வமான வேதவன விநாயகப் பெருமான் மீது என்னால் பாடப்பெறும் 3வது நூல் இதுவாகும். "வேதவனம்" என்னும் பஜனைப் பாடல் தொகுதி 2012ம் ஆண்டிலும், "வேதவன விநாயகர் பிள்ளைத் தமிழ்" என்னும் நூல் 2013ம் ஆண்டிலும் "வேதவன விநாயகர் கவசம்" என்னும் இந்நூல் 2019ம் ஆண்டிலும் வெளியீடு கண்டுள்ளதை எண்ணிப் பெருமிதமடைகின்றேன்.

இந்நூல் எனது தந்தையாரின் வேண்டுதலின்படி அவரது சிந்தனையின் வெளிப்பாடாக இன்றையதினம் வெளியீடு காண்கின்றது. வேதவன விநாயகரது அடியவர்கள் அனைவரும் இந்நூலை தங்கள் வீடுகளில் வைத்துப் பாராயணம் பண்ணிப் பயனுற வேண்டும் என்னும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் இச்சிறு கைந்நூல் இலவசமாக வெளியிடப்படுகின்றது. அனைவரும் பெற்றுப் பயனடையும் வண்ணம் வேண்டிக் கொள்வதோடு இந் நூலைக் குறுகிய கால இடைவெளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுற அச்சிட்டுத் தந்த மீசாலை சக்தி பதிப்பகத்தாருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இக் கவசத்திற்கு ஆசியுரை நல்கிய எமது தேவஸ்தான முன்னாள் சிவாச்சார்யரும் எனது முயற்சிகள் எல்லாவற்றுக்கும் நல்லாசிகள் நல்கிக் கொண்டு இருப்பவருமான சிவஸ்ரீ. கி.சோமசுந்தரக் குருக்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முத்துமாரிஅம்மன் கோவில் வீதி,**
**மட்டுவில் வடக்கு,**
**சாவகச்சேரி.**

**அன்புடன்**
**"வயலூரான்"**
**செல்வராஜா சுதாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

கல்வயல் வாழும் கணபதியே உன்னடி
நல்விதம் ஏத்தியே நானொரு - நல்ல
கவசம் ஒன்றைக் கருத்துடன் பாட
உவந்தே எனையும் உயர்த்து

வேத வனத்துறை வேழமுகன் தன்னரும்
பாதம் பணிந்தே பரவசமாய் - நாதமொடு
நற்கவசம் ஒன்றிங்கு நானுமே பாடிடப்
பற்றுடன் என்றுமே பார்

## வேதவன விநாயகர் கவசம்

கல்வயல் வந்தெம் கணபதி தன்னை
வல்வினை தீரவே வணங்கிப் பணிந்து
நல்லருள் பெற்றே நாளும் உயர்ந்து
நல்லறம் பேணியே நாட்டில் உயரத்
தொல்லைகள் எல்லாம் தூரவே விலகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகை நலமும் பாரினில் கிடைக்கும்
வேத வனந்தனை விரும்பியே அடைந்து
காதல் பொங்கிடக் கணபதி தன்னை
வேதனை தீரவே வேண்டிப் பணிய
விரும்பியே நல்லருள் வித்தகன் தருவான்
கருணை கொண்டே கவலைகள் தீர்ப்பான்
பெருமை பலவும் பெற்றிடவைப்பான்
பேரருள் தந்தே பேணிக் காப்பான்
ஐங்கரங் கொண்டே அவனியைக் காப்பான்
எங்களின் துயரை இல்லா தழிப்பான்
ஒற்றை மருப்பாய் ஒருகொம் புடையாய்
பற்றுடன் வருக பாரினில் வருக
இற்றரை உள்ளோர் இன்பமும் பெறவே
நற்றுனை யாகவே நாடியே வருக
வேலவன் சோதரா விரும்பி வருக
மாலவன் மருகா மண்ணில் வருக
கல்வயல் அமர்ந்த கணபதி வருக
வல்வினை தீர்க்கவே வருக வருக
வேத வனத்துறை வித்தகா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை தீர்த்திட விரும்பியே வருக
நெற்றிக் கண்ணுடை நிமலா வருக
கற்றவர் நிறைவாழ் கல்வயல் பதியில்
பொற்புடன் அமர்ந்த புனிதா வருக
பற்றிப் பணிவோம் பாங்குடன் வருக
அசுரரை அழித்த ஐயனே வருக
அருளைத் தரவே வருக வருக
அவலம் தீர்ப்பாய் வருக வருக
அவனி தன்னில் அமரவே வருக
ஆபத் தெல்லாம் அகற்றவே வருக
அச்சது பொடிசெய் அண்ணலே வருக
இச்சகம் என்றும் இன்புற வருக
மெச்சிப் பணியும் மேலவர் தம்மை
இச்சகம் உயர்த்த இன்புடன் வருக
நச்சியே பணிந்தோம் நாடியே வருக
கல்வயல் அமர்ந்த கணபதி வருக
நல்லருள் நல்கும் நாதா வருக
வேதனை தீர்த்திட வித்தகா வருக
வேத வனத்தமர் விநாயகா வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை ஆளும் இறையே வருக
சங்கடம் தீர்க்கும் தலைவா வருக
கஜமுக அசுரனைக் கடிதில் அழித்தே
காசினி காத்த கணபதி வருக
பனச தலத்தில் பாங்குடன் அமர்ந்து
தினமும் காக்கும் திருவே போற்றி
உனதடி போற்றும் உத்தமர் தங்கள்
கனவுகள் காக்கும் கணபதி போற்றி
கல்வயற் பதியுறை கணபதி போற்றி
நெல்வயல் சூழ நின்றாய் போற்றி
தொல்லைகள் தீர்க்கும் துணையே போற்றி
வேத வனத்துறை வித்தகா போற்றி
வேதனை தீர்த்திடும் விமலா போற்றி
சோதனை பலவும் துடைப்பாய் போற்றி
துயர்களை நீக்கும் சுந்தரா போற்றி
பயமெலாம் தீர்க்கும் பரனே போற்றி
மோதகப் பிரியாய் முதல்வா போற்றி
ஏதிடர் வரினும் எதிர்ப்பாய் போற்றி
மாதுமை பாகனின் மைந்தா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயவன் மருகா மருந்தே போற்றி
வேலவன் சோதரா வித்தகா போற்றி
வேத வனமமர் விமலா போற்றி
ஓதிட அருள்தரு மிறையே போற்றி
எங்களின் துயரினை ஏற்றே காக்க
பங்கம் தீர்த்துமே பாங்குடன் காக்க
பொங்கும் இடரினைப் போக்கியே காக்க
சிரசினை என்றும் சிற்பரா காக்க
நெற்றியில் அமர்ந்து நிமலா காக்க
பற்றுடன் புருவம் பரனே காக்க
செற்றவர் தமையும் சேர்த்தே காக்க
கண்கள் இரண்டைக் கணபதி காக்க
நண்ணும் நாசியை நம்பனே காக்க
நல்லெழில் வதனம் நாடியே காக்க
கரங்கள் இரண்டும் கணபதி காக்க
கைவிரல் பத்தும் கஜமுகன் காக்க
தோள்கள் இரண்டை துணையாய்க் காக்க
வாழ்க்கை முழுதும் வனமாய் காக்க
அணிசெய் மார்பை அண்ணலே காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகுள வயிற்றை அன்பால் காக்க
இருதொடை தன்னை இறைவா காக்க
வருவினை நீக்கியே வளமாய் காக்க
பாதம் இரண்டை பலமாய்க் காக்க
பேதம் நீக்கியே பெம்மான் காக்க
ஏதம் அகற்றியே எம்மைக் காக்க
ஆண்பெண் குறியை அன்புடன் காக்க
கணைக்கால் தன்னைக் கணபதி காக்க
இணைமுழந் தானினை இறையே காக்க
காலை மாலையிற் கணபதி காக்க
அல்லும் பகலும் அவனே காக்க
எல்லையில் நின்றே என்றும் காக்க
கல்வயல் தன்னைக் கணபதி காக்க
கவலைகள் நீக்கியே கஜமுகன் காக்க
தவறும் வேளையில் தண்ணருள் தந்தே
அவனி தன்னில் அன்புடன் காக்க
காக்க காக்க கணபதி காக்க
கல்வயல் தன்னைக் காசினி தன்னில்
நல்லருள் தந்தே நலமாய்க் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை என்றும் ஏரம்பன் காக்க
பங்கம் நீக்கிப் பரிவுடன் காக்க
கல்வயல் தன்னில் கருத்துடன் அமர்ந்து
வல்வினை தன்னை வாகாய் அழித்தே
நல்லருள் நல்கும் நம்பா போற்றி
வேதனை தீர்த்துமே வேத வனத்தில்
ஏதங்கள் நீக்கும் இறையே போற்றி
எங்களைக் காக்கும் இறையே போற்றி
மங்களம் அருளும் மலையே போற்றி
நெல்வயல் சூழ்ந்திட நின்றாய் போற்றி
கல்வயல் தன்னைக் காப்பாய் போற்றி
உன்னடி வணங்கும் உலகோர் தமக்கு
நின்னருள் நல்கியே நின்றாய் போற்றி
வேத வனத்துறை விமலா சரணம்
வேதனை நீக்கும் வித்தகா சரணம்
கல்வயல் அமர்ந்த கணபதி சரணம்
நல்லருள் தருவாய் சரணம்
சரணம் சரணம் திருவடி சரணம்

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

வேத வனத்துறை வித்தகன் தனது
பாதம் பணிந்து படைத்துள இந்தக்
கோதறு கவசம் குறைவறக் கூறின்
ஏதம் அகலும் எண்ணியவை நடக்கும்

வேதம் இதுவென விளங்கிக் கொண்டே
நாதம் உடனே நாளெலாம் நவில்வோர்
ஏதம் இல்லா எழிலுறு வாழ்வில்
நோதல் இன்றி நூறாண்டு காண்பர்

கருத்துடன் இந்தக் கவசம் தன்னைத்
திருந்தக் கற்போர் தீராத் துயரை
விருப்புடன் விரட்டி வெற்றியும் காண்பர்
பொருந்தும் இன்பம் புவியிற் பெறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் கைவண்ணத்தில் இதுவரை வெளிவந்தவை

1. பாலர் பாடல் திரட்டு - 1997
2. வேதவனம் - 2012
3. வேதவன விநாயகர் பிள்ளைத்தமிழ் - 2013
4. வயலூர்ரானின் வரிகள் - 2016
5. நெஞ்சுறுத்தும் நிஜங்கள் - 2017
6. பனிக்கண்டிக்காளி - 2018
7. பன்றித்தலைச்சியம்மன் பிள்ளைத்தமிழ் - 2019
8. குருதி படாக் காயங்கள் - 2019

**வெளிவர இருப்பது**

பாலர் பைந்தமிழ்ப் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org